Ti Nb Ir Ta Ru Pt

Ti Anode Fabricators Pvt. Ltd.
An ISO 9001 : 2008 Certified

Tiaano® Innovation In Inert Metals 23 YEARS Since 1992

# 48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: +91 44 2278 1148 Fax: 22781362 Mob: +91 94445 69900 Email: marketing@tianode.com Web: www.tianode.com

# “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## GOAL 2015-2016

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 156% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Mar. 16 : 941 Nos.
  - Up to Feb. 16 : 930 Nos.
- **Performance Mar. 16 …**
  - Turnover growth : 23.44%
  - Employment growth : 0.57%
  - 100% Attendance : 14.94 %


## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Treatment Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Equipments.
- HydroGen – HHO Generators
- Titanictrade – Portal for Exotic Metals
- Tiaano Vidyashrm (CBSE Curriculam)

## ACHIEVEMENT CHART




## நிழல்

ஒரு ஆலமரம் தானாக காற்றிலும், ஆடுமாடுகளுக்கிடையேயும், தண்ணீர் இல்லாமலும் கஷ்டப்பட்டு வளர்ந்து வருகின்றது. அது ஓர் உயரத்திற்கு வந்தபிறகு அதிலிருந்து விழுதுகள் ஒவ்வொன்றாக பூமியை நோக்கி செல்கின்றன. அவ்வாறு பூமியை நோக்கி செல்லும் விழுதுகளில் சில நன்கு வேரை ஊன்றுகின்றன. சில வேர் ஊன்ற முடியாமல் கஷ்டப்படுகின்றன.

சில விழுதுகள் ஊன்றினாலும், பூமியில் உள்ள மண்ணின் மகிமையால் கெட்டியாக நிற்பதில்லை. ஆனால் இவை அனைத்து விழுதுகளுக்கும் தேவையான தண்ணீரை, அந்த ஆலமரமே உறிந்து கொடுக்கின்றது. சில கெட்டியான விழுதுகள் அவைதானே தண்ணீரை உறிந்து மரத்திற்கு கொடுத்து கொண்டு, தனக்கு தேவையானதை பெற்றுக் கொண்டு இருக்கின்றன.

இன்னும் சில விழுதுகள் தன்னால் கெட்டியாக பூமியில் நிலைத்து நிற்க முடியாவிட்டால், அவற்றால் தண்ணீரை பூமியிலிருந்து ஈர்க்க முடியாது. அப்படிப்பட்ட விழுதுகளுக்கும் அந்த ஆலமரம் தான் தண்ணீர் பூமியிலிருந்து ஈர்த்து கொடுக்கின்றது.

இறுதியாக ஆராய்ந்து பார்த்தால் ஆலமரமானது, விழுதுகள் இவை அனைத்தும் ஒன்றாக இணைந்து தன்னையும் பூமியில் நிலைத்து நிற்க முடியாத விழுதுகளுக்கு தேவையான தண்ணீரையும், தன்னை நாடி வருபவர்களுக்கு நிழல் கொடுத்து உதவுகின்றன. அதுபோன்று நாமும் எந்த எதிர்ப்பார்ப்புமின்றி நம்மை சார்ந்த அனைவருக்கும் கொடுத்து உதவுவோம்.

*Compiled By : Mr. V. Azhakesan*
*Marketing*

## அனுபவம் இரண்டே வகைதான்!

அது ஷூ தயாரிக்கும் ஒரு பன்னாட்டு நிறுவனம். தனது கம்பெனியின் ஷூக்களுக்கு குறிப்பிட்ட ஓர் ஆப்பிரிக்க நாட்டில் எவ்வளவு ‘டிமாண்ட்’ இருக்கிறது என்று தெரிந்து கொள்ள கம்பெனி முதலாளி அந்த நாட்டுக்கு ஒரு மேனேஜரை அனுப்பினார். போன வேகத்திலேயே தனது நாட்டுக்குப் பறந்து வந்த மானேஜர், ‘அந்த நாட்டில் நாம் ஷூக்களையே விற்க முடியாது..’ என்று ரிப்போர்ட் கொடுத்தார்! ஏன்..? என்று கேட்டதற்கு அவர் சொன்ன பதில்.. ‘அந்த நாட்டில் யாருமே ஷூ அணிவதில்லை!’

முதலாளி, ‘முடியாது’ என்ற வார்த்தையை அத்தனை சுலபமாக ஏற்றுக் கொள்ளும் ரகம் கிடையாது. அதே ஆப்பிரிக்க நாட்டுக்கு இன்னொரு மானேஜரை அனுப்பினார். அந்த நாட்டுக்குப் போய் ஸ்டடி செய்த இரண்டாவது மானேஜர் சந்தோஷத்தில் துள்ளிக் கொண்டு முதலாளியின் அறைக்குள் ஓடி வந்து சொன்னார் – ‘நமது கம்பெனியின் ஷூக்களுக்கு அங்கே மிகப் பெரிய மார்க்கெட் இருக்கிறது!’. அந்த நாட்டில் யாருமே ஷூ அணிவதில்லை!.

இதிலிருந்து நாம் படிக்கவேண்டிய பாடம் இதுதான்! ஒவ்வொரு மனிதனும் அலுவலகம், வியாபாரம், வீடு என்று வகைவகையான

## FUNCTIONAL WISHES



May Day
01st May

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital<br>Tel: 22294565 |
| ESI Corporation | : Tambaram Dispensary<br>Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | | |
|---|---|---|
| **Mr. T. Stephen** | - Production | 02nd May |
| **Mr. M. Jegatheesh** | - Production | 04th May |
| **Mr. M. Venkatraman** | - Production | 04th May |
| **Mrs. C. Bavani** | - Admin | 04th May |
| **Mr. D. Raj Kumar** | - Production | 05th May |
| **Mr. S. Dhilip Kumar** | - Production | 05th May |
| **Mr. G. Balu** | - Fibtec | 05th May |
| **Mr. K. Sethuraman** | - Fibtec | 08th May |
| **Mr. T. Raja Singh** | - Fibtec | 10th May |
| **Mr. S. Chinnathangam** | - Coating | 10th May |
| **Mrs. S. Jayanthi** | - Coating | 10th May |
| **Mr. S. Lingathurai** | - Production | 13th May |
| **Mr. L. Marimuthu** | - Fibtec | 15th May |
| **Mr. M. Raj Kumar** | - Production | 16th May |
| **Mr. S. Lawrence** | - Production | 20th May |
| **Mr. B. Babu** | - Production | 20th May |
| **Mr. K. Saravanan** | - Production | 20th May |
| **Mr. S. Kalidasan** | - Purchase | 20th May |
| **Mr. T. Krishna Prabu** | - Production | 20th May |
| **Mr. T. Dinesh** | - Production | 21st May |
| **Mrs. L. Menaka** | - Facilitation | 25th May |
| **Mr. P. Karnan** | - Production | 25th May |
| **Mrs. P. Seeva Jothi** | - Design | 30th May |
| **Mr. M. Ramesh** | - Production | 31st May |

**Best Wishes from Tiaano Employees**

சந்தர்ப்பங்களில் விதவிதமான அனுபவங்களுக்கு ஆட்படுகிறான்! ஆனால் எல்லா அனுபவங்களையும் இரண்டே வகையாகத்தான் பிரிக்க முடியும்.

ஆட்படும் அனுபவம் எதுவாக இருந்தாலும், அதிலிருந்து ஏதாவது ஒரு பாடம் படிக்க வேண்டும் அது — சிறப்பான அனுபவம்! எந்த அனுபவத்திலிருந்து அவன் பாடம் எதுவுமே கற்றுக் கொள்ளவில்லையோ, அது — மோசமான அனுபவம்!

மின்சார விளக்கைக் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன், தனது முதல் முயற்சியிலேயே வெற்றியைத் தொட்டு விடவில்லை. ஏறக்குறைய ஆயிரம் சோதனைகளுக்குப் பிறகுதான் அவர் 'பல்ப்' கண்டுபிடித்தார். 'நீங்கள் ஆயிரம் சோதனை செய்தீர்கள்.. அதில் *999* சோதனைகள் தோல்வியடைந்தன. ஒன்றே ஒன்றுதான் வெற்றி பெற்றது! இல்லையா..?' என்று அவரிடம் யாரோ ஒருமுறை கேட்டார்கள்.

அதற்கு எடிசன் சொன்னார் —

'முதல் *999* சோதனைகளிலும் நான் எதுவுமே கண்டுபிடிக்கவில்லை என்று யார் சொன்னது..? ஒரு பல்ப்பை உருவாக்கத் தவறாக முயற்சி செய்வது எப்படி..? என்று இந்த *999* சோதனைகளிலிருந்து நான் கற்றுக் கொண்டேனே!'

*Compiled By : Mr. K. Manivannan*
*Marketing*

### Best Brains of the World (All are Indians)

38% *Doctors in US* are Indians

36% *NASA Scientists* are Indians

36% of employee of *Microsoft* are Indians

28% of employee of *IBM* are Indians

One in every three employee in *Apple* is Indian

| | |
|---|---|
| Sundar Pichai | – CEO, *Google* |
| Satya Nadela | – CEO, *Microsoft* |
| Thomas kurian | – CEO, *Oracle* |
| Sanjay Kumar Jha | – CEO, *Global Foundries* |
| Nikesh Arora | – CEO, *SoftBank Internet and Media* |
| Francisco D'Souza | – CEO, *Cognizant* |
| Dinesh Paliwal | – CEO, *Harman International* |
| Sanjay Mehrotra | – CEO, *SanDisk Corporation* |
| George Kurian | – CEO, *NetApp* |
| Shantanu Narayen | – CEO, *Adobe* |
| Vinod Dham | – Founder, *Pentium Chip* |
| Vonod Khosla | – Founder, *Sun Microsystems* |

More names like Indira Nui (CEO, *Pepsi*), Ajaypal Singh Banga(CEO, *Mastercard*), Ivan Menezes (CEO, *Diageo*, Biggest Alcoholic Beverage Company), Rakesh Kapoor (CEO, *Reckitt Benckiser*), LN Mittal (Chairman, *Arcelor Mittal Steels*), Ratan Tata (Chairman, *Land Rover*, Tata Motors)….list goes on

*Compiled By : Mrs. T. Gowsala*
*Marketing*

## தெரிந்து கொள்வோம்

**அல்சரால் அவதிப்படுவோர் குணமடைய பின்பற்றவேண்டிய வழிமுறைகள்**

1. அரை ஸ்பூன் சுக்குத் தூளைக் கரும்புச் சாற்றில் கலந்து காலை வேளையில் அருந்தலாம்.
2. மணத்தக்காளிக் கீரையைப் பாசிப் பயிறு நெய் சேர்த்துச் சமைத்து உண்ணலாம். பெருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி சம அளவு எடுத்துப் பொரித்து 2 கிராம் எடுத்து உணவிற்குப் பின் உண்ணலாம்.

*சேர்க்க வேண்டியவை*

கோஸ், கேரட், வெண்பூசணி, தர்பூசணி, பப்பாளி, ஆப்பிள், நாவல், மாதுளம்பழம், வாழைப்பழம், தயிர், மோர், இள நுங்கு.

*தவிர்க்க வேண்டியவை*

அதிகக் காரம், பொரித்த உணவுகள், அசைவ உணவுகள், தேன், புளி.

*கடைப்பிடிக்க வேண்டியவை*

காலை உணவைத் தவிர்க்கக் கூடாது. உரிய நேரத்தில் உணவை உண்ண வேண்டும். பரப்பரப்பைத் தவிர்த்தல் அவசியம். தினமும் குறைந்தது 2 லிட்டர் தண்ணீர் அருந்த வேண்டும். சரியான நேரத்துக்கு தூக்கம் அவசியம்.

*Compiled By : Mrs. R. Gayathiri*
*Receptionist*

### The Brain Benefits of Exercise

- Increases production of neurochemicals that promote brain cell repair
- Improves memory
- Lengthens attention span
- Boosts decision making skills
- Prompts growth of new nerve cells and blood vessels
- Improves multi-tasking and planning

### 5 Things You Can't Recover In Life

- A stone after its thrown.
- A word after its said
- An occasion after its missed
- Time after its gone
- Trust after its lost.

*Collected from Internet*

## Beautiful Messages

- Stay away from anger, it hurts only you.
- If you are right then there is no need to get angry, and if you are wrong then you don't have any right to get angry.
- Patience with family is love, Patience with others is respect. Patience with self is confidence and Patience with GOD is faith.
- Never think hard about the PAST, It brings tears. Don't think more about the FUTURE, It brings fears. Live this moment with a smile, it brings cheers.
- Every test in our life makes us bitter or better, every problem comes to make us or break us, the choice is ours whether we become victims or victorious.
- Beautiful things are not always good but good things are always beautiful.
- Do you know why God created gaps between fingers? So that someone who is special to you comes and fills those gaps by holding your hand forever.
- Happiness keeps you sweet so try and be as happy from within as possible.
- God has sent us all in pairs, someone somewhere is made for you. So wait for the right time and right moment.

*Compiled By : Mrs. M. Sudha*
*Marketing*

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி LII)

**ஜாக்கிரதை**

அப்போது ஏற்பட்ட மின் அதிர்ச்சியில், உள்ளே இருக்கும் ஆபத்தான வேதிப் பொருள்கள் உருண்டு சிதறுகின்றன. எல்லாம் கண்டபடி கலந்துபோய், 'டமால்' என்று பெரிய சத்தத்துடன் வெடிக்கின்றன.

இந்தக் கதையில் வரும் வேதியியல் ஆசிரியர் செய்த நல்ல விஷயம், ஆபத்தான பொருள்களையெல்லாம் கவனமாகப் பிரித்து எடுத்தது. ஆனால், அப்படிப் பிரித்த பொருள்களை உரிய பாதுகாப்புடன் சேமிக்கத் தவறிவிட்டார் அவர். ஆதனால்தான் இப்படி ஒரு விபரீதம் நேரிட்டுவிட்டது.

நமது தொழிற்சாலை, அலுவலகம், வீடுகளில் செய்டனைச் செயல்படுத்தும் போது, இப்படிப்பட்ட ஆபத்துகள் நேராதபடி நாம் கவனத்துடன் இருக்க வேண்டும். இதற்கு, பொருள்களைச் சேமிக்கும்போது, அவை உரிய முறையில், யாருக்கும் ஆபத்து ஏற்படுத்தாத முறையில் வைக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைப் பரிசோதிக்க வேண்டும்.

'ஆபத்து' என்றால் — சேமிக்கப்பட்ட பொருள்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்து, அவற்றைக் கையாள்கிற மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்து ஆகிய இரண்டுமே அதில் அடங்கும்.

## கவிதைகள்

### The Miracle of Friendship

A Miracle called friendship
Dwells within the heart

You don't know how it happens
Or when it gets it's start

But the happiness it brings you,
Always gives a special lift

Then you realize that friendship
Is one of God's most precious gifts!

### மகிழ்ச்சி படிகள்

விழுவதும் எழுவதும்தான்
வாழ்க்கை
ஏன் வீழ்ந்தோம்
எப்படி எழுந்தோம்
என உணர்ந்தால்
அதை அறிந்தால்
ஏற்றமோ இறக்கமோ
என்றும் வாழ்வின்
மகிழ்ச்சி படிகளில்
நாம் இருப்போம்.

*Compiled By : Mrs. S. B. Gokila*
*Quality Control*

### அன்பு

உங்கள் புன்னகையில் உள்ள
சோகத்தையும் கோபத்தில்
உள்ள அன்பையும் மௌனத்தில்
உள்ள காரணத்தையும் யார்
புரிந்து கொள்கிறார்களோ...!
அவர்களே உங்கள் அன்புக்கு
தகுதியானவர்கள்...!

*Compiled By : Ms. P. Nirmala Devi*
*Finance*

## சிந்தனைக்கு

நீங்கள் ஒரு வாய்ப்பைத் தவறவிட்டால்
உங்கள் விழிகளைக் கண்ணீரால்
நிரப்பாதீர்கள்!
உங்கள் கண்ணீர்,
உங்கள் முன் உள்ள இன்னொரு வாய்ப்பை
மறைத்துவிடும்!
அழகிய புன்னகையுடன் எதிர்கொள்ளுங்கள்!

*Compiled By : Mrs. C. Bavani*
*Administration*

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

உதாரணமாக, கனமான பொருள் ஒன்று இருக்கிறது. அதை அலமாரியின் கீழ்த் தட்டில் அல்லது வெளியே பாதுகாப்பான ஓர் இடத்தில் வைப்பதுதான் நல்லது. அப்படியில்லாமல், அதைத் தூக்கிமேல் தட்டில் வைத்தால், பாரம் தாங்காமல் அந்த அலமாரி உடைகிற சாத்தியங்கள் உண்டு. அப்போது, அந்தப் பொருளும் உடைந்துபோகலாம், பக்கத்தில் இருக்கிறவர்களுடைய மண்டையும் உடையலாம்.

இதுபோன்ற நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்காக, பொருள்களைச் சேமிப்பதில் சில அடிப்படை விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

முதலாவதாக – பொருள்களைச் சேமிக்கும்போது அவற்றின் எடையைக் கருத்தில் கொள்ளவேண்டும். ஒன்றன்மீது ஒன்றாக நிறைய டப்பாக்களை அடுக்கிக் கொண்டேபோனால், உச்சியில் இருக்கிற டப்பா தவறி விழக்கூடும். கீழே இருக்கிற டப்பா பாரம் தாங்காமல் பாதிக்கப்படக்கூடும்.

இதற்காக, பெரும்பாலான உற்பத்தியாளர்கள் தங்களுடைய பொருள்களைப் பெட்டிகளில் அடைக்கும்போதே, அதில் சில குறியீடுகளைச் சேர்க்கிறார்கள். உதாரணமாக, தொலைக்காட்சிப் பெட்டிகளில் மேல்நோக்கிய அம்புக்குறி ஒன்றையும், அதன் அருகே '5' அல்லது '8' போன்ற எண் ஒன்றையும் பார்த்திருப்பீர்கள்.

தொடரும்...

